



# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

## விருதுநகர் மாவட்டம் - புல்வாய்பட்டி ஊராட்சி

விருதுநகர் மாவட்டம்,சாத்தூர் வட்டம், சாத்தூர் ஊராட்சி ஒன்றியம், புல்வாய்பட்டி ஊராட்சி, பேரய்யன்பட்டி கிராமம், சர்வே எண்:188/1பி, 188/2ஏ, 189/1பி, 189/2, 189/3பி, 189/4பி, 189/5ஏ, 190/4பி, 190/5பி, 190/7பி மற்றும் 190/8ஏ -இல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

(திட்டமில்லாத பகுதி)

ONLINE APPLICATION NO: 28YGG82V | அளவு : 1:800 | வ

**குறிப்புகள்:**

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | - | 9.76 ஏக்கர் (39537.00 ச.மீ) |
| மனைப்பிரிவு உத்தேச சாலையின் பரப்பளவு மூலை முடக்கு உட்பட | - | 11872.67 ச.மீ |
| மீதமுள்ள மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | - | 27664.33 ச.மீ |
| மனைப்பிரிவு இடத்தின் எல்லை | - | |
| நிலையிலுள்ள சாலை | - | |
| மனைப்பிரிவு உத்தேச சாலை | - | |
| மனுதரர் உபயோகம் (புல்வெளி பகுதி) | - | 381.04 ச.மீ |
| கோரிய மனைகளின் எண்ணிக்கை | - | 204 எண்ணம் |

**ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை**

| | | |
|---|---|---|
| சாதாரண வகை மனைகள்<br>மனை எண்கள்:1-3, 20-108, 125-126 மற்றும் 144-203 | - | 154எண்ணம் |
| குறைந்த வருவாய் பிரிவினர் (EWS) மனைகள்<br>மனை எண்கள்: 4-19, 109-124 மற்றும் 127-143 | - | 149எண்ணம் (2933.61) (10.60 %) |
| மொத்த மனைகள் | - | 203 எண்ணம் |

**பொது ஒதுக்கீடு:** (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது)

| | | |
|---|---|---|
| சாலை பரப்பு | - | 11872.67 ச.மீ |
| பூங்கா | - | 2843.63ச.மீ (10.27 %) |
| உள்ளாட்சி உபயோகத்திற்கு **(A)** | - | 146.55ச.மீ (0.52 %) |
| தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின்பகிர்மான கழக (TANGEDCO) உபயோகத்திற்கு **(B)** | - | 143.85ச.மீ (0.51%) |

**மூலை முடக்கு**

12.00மீ அகலச்சாலைகள் வரை 1.50மீ x 1.50மீ விடப்பட வேண்டும்.
24.00மீ அகலச்சாலைக்கு 4.50மீ x 4.50மீ விடப்பட வேண்டும்.

**நிபந்தனைகள்:**

1. அரசாணை எண் : 18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MA-1)நாள் 04-02-2019-ன் படி உள்ள நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.
2. அரசாணை எண் : 16, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MA-1)நாள் 31-01-2020-ன் படி உள்ள நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.
3. இம்மனைப்பிரிவுக்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தில் எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதம் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சியால் உறுதி செய்து கொள்ளபடல் வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின், மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குனர், அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை தொழில் நுட்ப ஆவணங்களில்(கிரையப்பத்திரம்-குத்தகை பத்திரம் - பட்டா - தானபத்திரம் - பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் மூலம் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
7. நீர் நிலைகள் பாதிக்கப்படாத வண்ணம் கட்டிடம் கட்டப்பட வேண்டும்.
8. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6 X 4 என்ற அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
9. நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கது அல்ல.
10. இம்மனைப்பரிவில் அமையும் குறைந்த வருவாய் பிரிவினருக்கான (EWS) மனை எண்கள்: 4-19, 109-124 மற்றும் 127-143 வரையிலான மனைகளை ஒருங்கினைத்தல் அல்லது உட்பிரிவு செய்தல் கூடாது.
11. இம்மனைப்பரிவில் அமையும் புல்வெளி பகுதியினை மனுதாரர் புல்வெளியாகவே நிலைநிறுத்தப்பட வேண்டும்.

ம.வ /ந.ஊ.து.இ (விருமா) எண்: 107 / 2025

வரைவாளர் நிலை-III

மேற்பார்வையாளர்

உதவியியக்குநர்

துணை இயக்குநர் (பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
விருதுநகர் மாவட்டம்

Signature Not Verified